

# பரலோக பொக்கிஷங்கள்

*உங்கள் பொக்கிஷம் எங்கே?... அங்கே உங்கள் இருதயம்!*

## 'தேவ கிருபையில் பெருகி வாழ்ந்திட' ஓர் ரகசியம்!

நீங்களும், உங்கள் குடும்பமும் "தெய்வ கிருபையில் பெருகி வாழ்ந்திட" 2கொரிந்தியர் 9:8, கற்றுத்தருகிறது: தான் பெற்ற சுவிசேஷத்தை மகிழ்வுடன் பிறருக்கு ஆசீர்வாதமாய் கொடுத்தவர்கள், 'எல்லாவற்றிலும் எப்பொழுதும்' சம்பூரணமுடையவர்களாய் இருப்பார்கள்! என்றும், சகலவித நற்கிரியைகளிலும் பெருகுவார்கள்! என்றும், வல்ல தேவன் அவர்களிடத்தில் **சகலவித கிருபைகளையும் பெருகச் செய்வார்** என்றும் இந்த வசனம் பூரிப்புடன் கூறி நம்மை 'சுவிசேஷப் பணிக்கு' உந்திச்செல்ல உற்சாகமளிக்கிறது! இதை அறிந்த கொரிந்திய ஜனங்கள் "கிறிஸ்துவின் சுவிசேஷத்தை கீழ்ப்படிதலுடன் அறிவித்தார்கள்!" (13-ம் வசனம்) என கூறும் கீழ்ப்படிதல் நம் குடும்பத்திலுள்ள சபையிலுள்ள யாவருக்கும் நிறைவேற தேவன் கிருபை செய்வாராக!

இங்கு நீங்கள் எச்சரிக்கையாய் கேட்க வேண்டிய முக்கியமான செய்தி என்னவென்றால்: "சுவிசேஷம் பெறாத தரித்திரர்களுக்கு, வாரியிறைத்து கொடுத்தபடியால், அவனுடைய நீதி நிலைநின்றது!" என்ற பாக்கியம்தான்! (2கொரி.9:9). எல்லாவற்றிற்கும் மேலாக, கிறிஸ்துவுக்குள் நிலைத்திருக்கும் பாக்கியம், நம் யாவர் குடும்பத்திற்கும் உண்டாவதாக!

*-tr*

பெட்டகம் 39 செப்டம்பர் 2023 பரல்கள் 09



## ஆவிக்குரிய வரங்களை 'மனுஷீக திறமைகள்' புறக்கணிக்கும் காலம்!

**பு**திய ஏற்பாடு வழங்கும் மிகப்பெரிய ஆசீர்வாதம், சபை ஊழியங்கள் "ஆவியின் வரங்களினால்" ஆட்கொள்ளப்பட வேண்டும் என்பதுதான். ஆனால், காலங்கள் கடந்து செல்லச் செல்ல, 'இந்த பொக்கிஷம்' சபை ஊழியங்களில் மங்கிக்கொண்டே போகிறது. ஆவியின் வரங்கள் ஒன்பது என்றே ஜனங்கள் முற்றுப்புள்ளி வைக்கிறார்கள். ஆனால் உண்மையில் 1கொரி.12:4-11, 27-31; ரோமர் 12:3-8; எபே.4:7-11 ஆகிய வசனங்களை தொகையிட்டால் இங்கு பவுல், சுமார் 17 வரங்களுக்கு மேல் குறிப்பிட்டிருக்கிறார். நாம் கவனித்துப் பார்க்க வேண்டியது என்னவென்றால், இவ்வித ஊழிய தாலந்துங்கள் இயற்கையான திறமைகள் அல்ல! அது, அந்த விசுவாசியின் உத்தம ஜீவியத்தை ஆதாரமாய் வைத்து, பரிசுத்தாவியானவர் அவனுக்கு வழங்கும் வரங்களாகும். இவர்களையே, கிறிஸ்துவின் சரீரத்தில் ஓர் பங்காக பரிசுத்தாவியானவர் ஏற்படுத்தியுள்ளார். காலங்கள் கடந்து செல்லச் செல்ல சுவிசேஷ போதகர்களிடம் 'ஆதிநிலை மங்கத் துவங்கிவிட்டது'.

ஆவியின் வரங்கள் பெற்ற தாசர்களுக்குப் பதிலாக, கிட்டத்தட்ட எல்லா சபைகளிலும், அவர்களின் பட்டம், பதவி, பணம் அடிப்படையில் 'ஊழிய' தேர்தல் நடத்தப்படுகிறது! 'மானிட அறிவு வரம் கொண்ட' திறமைசாலிகள் குழுக்களாய் கூடி விவாதித்து, அரசியல் போன்று சபை நடத்தும் கொடுமை வெகுவாய் தலைவிரித்தாடுகிறது. இருப்பினும், தேவன் உண்மையுள்ளவர்! இந்த கொடிய நாட்களிலும் ஆவியின் வரங்களை நாடும் தாசர்களை எழுப்பி, இந்த பூமியில் புதிய ஏற்பாட்டின் ஊழியத்தை மாசுபடாமல் நிரூபித்து கர்த்தர் வெற்றி சிறப்பார்! *-Ed*

### 2023 'பரலோக பொக்கிஷங்கள்' சந்தா புதுப்பிக்கவும்

வருட சந்தா ரூ.**170/-** தயவுசெய்து உடன் M.O செய்து அல்லது ஆன்லைன் மூலம் கீழ்கண்ட வங்கி கணக்கிற்கு **செப்டம்பர் 15-ம் தேதிக்குள்** அனுப்பி புதுப்பித்துக்கொள்ள அன்புடன் வேண்டுகிறோம். ஒரே விலாசத்தில் **3**பிரதிக்கு மேல் ஒரு பிரதி வீதம் ரூ.**140/-** அயல்நாடு ஒரு பிரதி ரூ.**950/-** அனுப்ப வேண்டும். புதுப்பித்துக் கொள்பவர்கள், தங்கள் சந்தா எண்ணை குறிப்பிடவும், புதிதாய் வாங்குபவர்கள் **'புதிது'** என்று குறிப்பிடவும். நன்றி!

**ஆவிக்குரிய விழிப்பூட்டும்! அனல் குன்றா வழிகாட்டும்! அசல் உயர்த்தி போலி அகற்றும்!
சமரசம் மறுத்து சத்தியம் பேசும்! குருவின் அடிச்சுவடில் சீஷர்களை எழுப்பும்!**

வங்கி கணக்கு: MADURAI CHRISTIAN FELLOWSHIP, Indian Bank - Koodal Nagar Branch
A/c No: **502087685** IFSC Code: IDIB000K150
(பின்பக்கம் உள்ள **QR** கோடு மூலமும் அனுப்பலாம்)
(வங்கியில் செலுத்தியபின், உங்கள் விலாசம் மற்றும் தகவல் தெரிவிக்கவும்)

கடித தொடர்பு : பரலோக பொக்கிஷங்கள் 207A- Jaheer Husain Street, Koodal Nagar,
(Thathaneri P.O.) Madurai - 625018,S.India Cell : 9843049935 Ph (O) 0452 - 3585200
Email: rathnakumar.t@gmail.com தமிழ் வலைதளம்: paralogapokkishangal.com
You Tube : paralogapokkishangal

## துயரத்திலும் நிலைத்திருக்கும் 'அவரின் சமாதானம்!'

*'கைவிடாது காக்கும்' தெய்வ சமாதானம்*

ஆண்டவர் இயேசு உரைத்த வாசகங்களில் மிக விலையேறப்பெற்ற ஒரு முக்கிய வாசகம் என்னவெனில் "என்னுடைய சமாதானத்தையே உங்களுக்குக் கொடுக்கிறேன்" என்பதாகும் (யோவான் 14:27). ஒருசமயம், இரண்டு பிரபல்யமான ஓவியர்கள் அழைக்கப்பட்டு **'எது பூரண இளைப்பாறுதல்?'** என்ற கேள்விக்குரிய விடையை சித்திரம் தீட்டி காண்பித்திட கேட்டுக்கொள்ளப்பட்டார்கள்!

**முதல் ஓவியர்** ஓர் தூரமான மலைகுன்றிலிருந்து புறப்பட்டு வந்த ஓர் அமைதியான உள்ளம் கவரும் ஆற்றுப்படுகையை சித்தரித்து ஓவியம் வரைந்தார். ஆனால், அந்த **இரண்டாம் ஓவியரோ** முதல் ஓவியர் வரைந்த சித்திரத்திற்கு முரண்பாடான ஓவியத்தை வரையத் தொடங்கினார். அவர் வரைய வைத்திருந்த தோல் சுருளை விரித்து வைத்து, இடி-மின்னல் தோற்றத்தை முதலாவதாக வரைந்தார். அதிலிருந்து பெய்த மழையின் 'நுரை பொங்கி வந்த வெள்ளப்பெருக்கு' ஓர் ஆறாக வழிந்து, அந்த மலையிலிருந்து நீர்வீழ்ச்சிகளாக கொட்டியது. நீர்வீழ்ச்சியின் கீழ் பகுதியில் ஓர் பீச் மரத்தின் கிளை படர்ந்து, அந்த கிளையில் நீர்வீழ்ச்சியின் தண்ணீர் துளிகள் தெறித்து விழுந்து கொண்டேயிருந்தது. இங்குதான் ஓர் அதிசயத்தை ஓவியர் வரையத்தொடங்கினார்! அந்த அதிசயம் என்னவெனில், தெறித்து விழுந்த நீர் துளியால் ஆடி அசைந்து கொண்டிருந்த அந்த பீச் மரத்தின் கிளையில், ராபீன் குருவி ஒன்று கூடுகட்டி தன் குஞ்சுகளோடு அமைதியாய் இருப்பதை அந்த ஓவியர் வரைந்தார்.

> முதல் ஓவியர் தந்த விளக்கம் "தன் அளவில் இனிய சலசலப்புடன் ஓடிக் கொண்டிருந்த ஓர் அமைதியான நீரோடை!". இரண்டாவது ஓவியர் தந்த ஆச்சரியமான விளக்கம் என்னவென்றால், இத்தனை இரைச்சல் கொண்ட சூழ்நிலையிலும் 'தன் இளைப்பாறுதலை இழக்காதிருந்த' ஒரு ராபீன் குருவியின் கூடும், அதன் குஞ்சுகளுமேயாகும்!

கிறிஸ்துவின் வெளியரங்கமான உலக வாழ்க்கை எந்த மனிதனும் வாழ்ந்திராத, அதிகபட்சமான துன்பத்தின் வாழ்க்கையேயாகும்: "அது, சூறாவளியும் சஞ்சலமும், திரும்பத் திரும்ப சம்பவித்த வாழ்க்கையாகவேயிருந்தது. ஓர் பாறையில் திரும்ப திரும்ப அலை மோதி அடித்து, இப்போது இந்த பாறை உடைந்து கரைந்து, முடிவில் தொய்ந்து போய், நொறுங்கி விழ வேண்டிய நிலைக்கு வந்துவிட்டது! ஆனால் விந்தை என்னவென்றால் "அவருடைய **உள்ளான ஜீவியமோ 'பளிங்கு நீரோடையைப்போல்'** இருந்தது. ஓர் மிகப்பெரிய அமைதி அவருடைய உள்ளான ஜீவியத்தில் நிரந்தரமாய் குடிகொண்டிருந்தது!".

இப்போது நாம், எந்த சூழ்நிலையிலும் கிறிஸ்துவினிடத்தில் நெருங்கி அவர் தரும் இளைப்பாறுதலை பெற்றுக்கொள்ள முடியும்!

**மனுஷீக பொறாமை வெறிகொண்ட ஜனங்களால் எருசலேம் வீதியில் இயேசு இழுத்துச் செல்லப்பட்டபோது, தன் சீஷர்களைத் திரும்பிப் பார்த்து தன் பரம பெட்டகத்திலிருந்து அவர்களுக்கு கொடுத்து வழங்கியதே அவரது "என் சமாதானம்!".**

"இன்று நான் சபைக்குச் சென்று சமாதானம் பெற்று வருவேன்" என மிக சாதாரணமாய் கூறிக்கொள்வதல்ல 'அவருடைய சமாதானம்'. அது, **தேவனுடைய ஆழத்தில் சென்று** இயேசு தன் இருதயத்தில் பெற்று வந்த சமாதானமேயாகும்!

**அவர் தரும் சமாதானத்தின் மதிப்பைப் பாருங்கள்:**

1. மீள முடியாத என் துக்கத்தில் "அவருடைய சமாதானம் எனக்கு அமைதியும், நம்பிக்கையும் தந்தருளி" என் துயரத்திலிருந்து என்னை மீண்டு வரச்செய்தது!
2. என்னுடைய ஜெபம் கேட்கப்படவில்லையோ? என்ற கலக்கத்தின் நேரத்தில், அவருடைய சமாதானமோ "என்னுடைய வாக்குதத்தங்கள் அருளப்பட்ட வார்த்தைகள் ஒருபோதும் உன்னைவிட்டு விலகவில்லை!" என்பதை நான் அறியும்படி செய்தது.
3. நான் 'தனிமையில் விடப்பட்ட' காரிருள் சூழ்நிலையில், அவருடைய சமாதானம் **இரவிலே பாடும் ஒரு நைட்டிங்கேல்** பறவையின் இனிய தொனியை எனக்கு அனுப்பி ஆதரித்தது!
4. 'முற்றிலும் இழந்தேன்' என்ற துயர நேரத்தில், அவருடைய சமாதானம் "மகிமையின் பாதை செல்லும்" சிலுவைக்கே என்னை கொண்டு சென்றது!
5. என்னைச் சுற்றிலும் சத்துருக்களின் புறங்கூறுதல் என்னை

*மேற்கொள்ள வந்தபோது உம்முடைய சமாதானம், எனக்கு ஏற்பட்ட இலச்சையின் மத்தியில் **'தேவனுடைய இனிய ஐக்கியத்தை'** வழங்கி ஆறுதல் செய்தது!*

6. *என் வேதனையின் வியர்வை சிந்திய நேரத்தில், உம்முடைய சமாதானம் "உனக்காக என் வியர்வை இரத்தத்தின் பெருந் துளிகளாய், **இன்னமும் ஈரமாய்** இருப்பதாகவே காண்பித்து" என்னை ஆறுதல் செய்தது!*

7. *என்னுடைய நெருங்கிய நண்பனும் எனக்கு தூரோகம் செய்த வேளையில், உம்முடைய சமாதானம், துரோகம் செய்த அவர்களுக்காக **'ஜெபிக்கும் அன்பை'** எனக்கு வழங்கியது!*

8. *"எல்லாம் முடிந்தது, இனி மரணம் தான்! இனி உம்மிலே மரிப்பேன்" என்ற திகைப்பின் நேரத்தில், சிலுவை பயண வாழ்க்கை முடிவு "உம்மிடம் வந்து சேரும்படி பரலோக வாசல் திறக்கும்" என்ற விசுவாசம், என்னை உமது சமாதானத்தில் இறுதிவரை காத்தது! ஆமென்.*

*- Mrs.சார்லஸ் கஃவ்மென்*

---

## சபை ஐக்கியம் கட்டுவதற்கு நம்மை தாழ்த்துவது ஒன்றே தேவை!

*'கர்த்தரோடு கொண்ட ஐக்கியமே' முதல் தேவை*

ஆண்டவர் இயேசு, மார்த்தாளைப் பார்த்து "தேவையானது ஒன்றே!" என்ற விழிப்பூட்டும் செய்தியைக் கூறினார். **"கர்த்தரோடு கொண்டிருக்கும் ஐக்கியமே"** அந்த தேவையான ஒன்றாகும். ஆண்டவரோடு ஐக்கியம் கொள்வதற்கு மார்த்தாளுக்கு நேரமில்லை! அதுபோலவே இன்றுள்ள திரளான கிறிஸ்தவர்களுக்கும் நேரமில்லை. இவர்கள் தங்கள் ஊழியத்தில் மிக சுறுசுறுப்பாய் இருக்கிறார்கள், அது நல்லதுதான். ஆனால், இந்த ஜனங்கள் தங்கள் ஆண்டவரிடம் வைத்திருந்த ஐக்கியத்தையோ இழந்து விட்டார்கள். இதுபோன்ற தவறுதான் அதிகபட்சமாய் எங்கும் காணப்படுகிறது.

*குறிப்பாக 'குடும்பங்களிலும்' இந்த தவறு ஏற்படுவது பெரிய நஷ்டமாகும். இதற்கு கூறப்படும் காரணம் என்னவென்றால் "எங்களுக்கு எவ்வளவோ வேலைகள் இருக்கிறது! வீட்டிலுள்ள அனைத்தையும் ஒழுங்கும் கிரமமுமாய் சுத்தம் செய்து அடுக்கி வைக்கப்பட வேண்டும்" என்றெல்லாம் பேசிக்கொள்கிறார்கள். காலையிலிருந்தே உணவு சமைக்கும் பணியில் சுறுசுறுப்பாய் இருக்கிறார்கள். பின்பு துணி துவைக்கத் தொடங்கி விடுகிறார்கள்.*

பின்பு பிள்ளைகளின் சீருடைகளை விசேஷித்த விதமாய் துவைத்து, மற்ற பிள்ளைகளோடு செல்லும் போது, தங்கள் பிள்ளைகளின் சீருடை பளிச்சென்று இருக்க நாடுகிறார்கள். மற்றவர்களின் பார்வைக்காகவும் அவர்களின் கவனத்திற்காகவும் இவர்கள் எதை வேண்டுமானாலும் செய்து கொண்டிருப்பார்கள்! உணவுக்காகவும் உடைக்காகவும் இவ்வளவு கவனம் செலுத்த வேண்டிய அவசியமே இல்லை! இயேசு கூறியதுபோல் "அவரோடு கொண்ட ஐக்கியமே" பிரதான முக்கியத்துவம் கொண்டதாகும்!

நீங்கள் எவ்வளவு **உலக காரியத்தை முதன்மைப்படுத்தி** அதிக பிரயாசம் எடுக்கிறீர்களோ, அந்த அளவிற்கு உங்கள் நரம்புகள் பெலவீனப்பட்டு உங்கள் நிம்மதியை இழக்க நேரிடும்! நமக்குள் இருக்கும் உள்ளான மனிதன் இவ்வித **நிம்மதியற்ற நிலையில்** பக்தி விருத்தி அடைந்திட முடியாது. இந்த நிலையில் இனிமேல், நீங்கள் எதைச் செய்தாலும் உங்களுக்கு பிரச்சனையாகவே இருக்கும்!

"முதலாவதாக தேவனுடைய ராஜ்ஜியத்தைத் தேடுங்கள்" என இயேசு கூறிய வசனம் '**தேவையானது ஒன்றே**' என இயேசு குறிப்பிட்ட ஐக்கியத்திற்கே தொடர்புடையதாகும். இந்த அவருடைய கட்டளைக்கு கீழ்ப்படிய வேண்டுமென்றால், சில பூமிக்குரிய காரியங்களை தள்ளி வைத்துவிடவோ அல்லது இழக்கவோ நேரிடக்கூடும். அவைகளைச் செய்வதற்குப் 'போதுமான நேரம் மீதமிருந்தால்' பார்த்துக் கொள்ளலாம். ஆகவே 'முதலாவது' தேவனுடைய ராஜ்ஜியமே எப்போதும் இருக்கட்டும்!

இவ்வாறு, தேவனிடத்தில் போலவே, ஒருவருக்கொருவர் கொண்ட ஐக்கியத்திலும் இருக்கிறது. ஒரு வீட்டில் உள்ள பிள்ளைகளிடத்தில் பிரச்சனை ஏற்பட்டாலோ அல்லது பிள்ளைகளுக்கும் பெற்றோர்களுக்கும் இடையே பிரச்சனை ஏற்பட்டாலோ அல்லது கணவனுக்கும் மனைவிக்கும் இடையே பிரச்சனை ஏற்பட்டாலோ "**அவர்களிடத்தில் ஐக்கிய குறைவு ஏற்பட்டுள்ளது**" என்பதே காரணமாகும். உதாரணமாக, நம்முடைய பிள்ளைகளிடத்தில் ஐக்கிய குறைவு இருக்குமென்றால், அவர்களை கீழ்ப்படிதலுக்குள் கொண்டு வருவது கடினமாயிருக்கிறது. ஆகவே நாம் எடுத்துக்கொள்ள வேண்டிய பொறுப்புள்ள கடமை என்னவென்றால் "பிள்ளைகளோடு நம் ஐக்கியத்தை பெலப்படுத்த வேண்டும்" என்பதேயாகும். அநேக சமயங்களில் பிள்ளைகள் வளர்ந்து கீழ்ப்படியாமைக்குள் பிரவேசித்து விடுகிறார்கள். இச்சமயங்களில், பெரும்பாலான பெற்றோர்கள் கொண்டிருக்கும் மனநிலை என்னவென்றால், அவர்களை அதிகமாய் அடித்து திருத்த வேண்டும் என்பதேயாகும்!

**ஆனால் அவர்களோ, இப்போது பெரிய பிள்ளைகளாய் மாறி விட்டார்கள். எனவே 'அடித்து திருத்தும் காலம்' கடந்துவிட்டது! அதை இப்போது நடைமுறைப்படுத்துவது கடினம். இப்போது பெற்றோர்கள் செய்ய வேண்டியதெல்லாம், தங்கள் பிள்ளைகளிடம் கவனம் செலுத்தி, அவர்களோடு தங்கள் ஐக்கியத்தை கட்டுவதேயாகும். எப்படி அதை கட்டுவது? :**

*அதிகபட்சமாய் நமக்கு வேதம் உணர்த்துவதெல்லாம், நம்மையே தாழ்த்துவதுதான்! இதுபோன்ற இக்கட்டான நிலையில் பவுல் தள்ளப்பட்டபோது, கொரிந்தியர்களுக்கு முன்பாக அவர் அப்படிச்செய்தார். அவர் கூறினார் "கொரிந்தியரே, நான் உங்களிடத்தில் வரும்போது, என் தேவன்* ***என்னை உங்களுக்கு முன்பாக தாழ்த்துவாரோ*** *என்றே அஞ்சுகிறேன்"* ***(2கொரி.12:21)*** *என உரைத்தார். ஆகவே பெற்றோர்கள், தங்கள் வளர்ந்து விட்ட பிள்ளைகளிடம் ஐக்கியப்படுவதோ அல்லது கணவன் மனைவியிடத்தில் ஒருவருக்கொருவர் ஐக்கியம் கொள்வதோ அல்லது ஐக்கியத்தை கட்ட விரும்பும் யாராயிருந்தாலும், ஆண்டவராகிய இயேசுவும் பவுலும் செய்து காட்டியதைப் போலவே, நம்மை நாமே தாழ்த்துவதுதான் ஒரே வழி!*

*- ஸிகார்ட் பிராட்லி*

---

## தேவன் புடைக்கும் சபை, பரிசுத்தத்தில் வளரும்!

*'தெய்வ பயமே' பரீட்சையில் நின்றிட பெலன் தரும்*

இன்றுள்ள கிறிஸ்தவ சபைகளில் பேசும் சத்தியங்களில், மேலும் மேலும் 'தண்ணீர் ஊற்றப்பட்டு' நல்ல மருந்தாய் குணப்படுத்த வேண்டிய சத்தியம், இந்த தண்ணீரில் வடிந்து போய், அங்கு அமர்ந்திருக்கும் ஒருவரையும் சுகப்படுத்தவில்லை. இன்றைய திரள் கிறிஸ்தவ விசுவாசிகள், கிறிஸ்தவத்திற்கே அவமானமான, தரம் கெட்ட வாழ்க்கையே வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்!

பல்லாண்டுகளாய் சத்தியத்தைப் பிரசங்கித்துவரும் நான், சத்தியத்தைக் கேட்ட ஜனங்களில் பெரும்பாலோர், பகிரங்கமான பிழையோடு வாழ்வதையே நான் காண்கிறேன்! இதுபோக, இன்னும் பலர் **கற்பு ஒழுக்கத்தில் கூட தெய்வ பயத்தோடு வாழவில்லை.** இவர்கள் வேத வாக்கியங்களின் கூர்மையை மழுக்கி, தேவனுடைய சித்தத்திற்கு வெளியேதான் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். இதில் இன்னமும் மோசமான பின்மாற்றம் என்னவென்றால், தங்களின் தோல்வியை நியாயப்படுத்தி, அதை யாராவது கடினமாய் வலியுறுத்தி புத்தி கூறினால் 'முகம் சிவக்க' அவர்கள் மீது கோபம் அடைகிறார்கள்!

இனிமுதற்கொண்டு, இவ்வித தரம் குறைந்துபோன இன்றைய ஆவிக்குரிய நிலைமையை நீங்கள் பார்த்து ஆச்சரியப்படாதீர்கள்! இப்படியெல்லாம் சம்பவிக்கும் என வேதம் முன்கூட்டியே எச்சரித்து உள்ளது. அன்று இஸ்ரவேலர்களுக்கு தரப்பட்ட அதே எச்சரிக்கை தான் புதிய ஏற்பாட்டிலும் தரப்பட்டுள்ளது! அந்த இஸ்ரவேல் புத்திரர்கள் கடற்கரை மணலத்தனையாய் இருக்கும்படியே திரளாய் அழைக்கப்பட்டார்கள்.... ஆனால், அவர்களில் இரட்சிக்கப்பட்ட வர்களோ மிக குறைவாய் போய்விட்டனர். புதிய ஏற்பாட்டிலும், நமது ஆண்டவர் "**அநேகருடைய அன்பு குளிர்ந்துபோகும்!**" என்றே எச்சரித்து உள்ளார். வெளிப்படுத்தின விசேஷத்தில் நாம் காணும் ஏழு சபைகளின் நிலைமையில், பெரும்பாலான சபைகள் 'சபை என்ற பெயரில்' இயங்கிக் கொண்டிருந்தன, அவ்வளவுதான்! ஆனால், அவர்கள் தங்களின் ஆதி அன்பை இழந்து, ஆவிக்குரிய தாறுமாறுகளையும் சபைக்குள் கொண்டுவந்து விட்டார்கள்! இன்றைய நம்முடைய காலத்திற்கும், இவைகளையே நாம் எச்சரிக்கையாய் மனதில் எடுத்துக் கொள்வோமாக.

வெற்றியுள்ள கிறிஸ்தவ வாழ்க்கை என்றும்! ஆவிக்குரிய ஆழ்ந்த சத்தியங்கள் என்றும்! திரண்டு வந்த ஜனத்திரளில் பெரும்பாலோர் "ஏதோ அபூர்வமான ஒன்றில் ஆர்வம் கொண்டார்கள்" அவ்வளவு தான். இவ்வாறு அபூர்வங்களைக் கண்ட பரவச மக்களுக்கென்றே, 'ஆழ்ந்த சத்தியங்கள்' எனக் கூறும் புத்தகங்கள், புத்தக சாலையில் நிரம்பி வழிகின்றன.

**இந்த வெறும் ஆர்வத்தோடு சத்தியங்களைக் கேட்ட திரளானோர், அதன்படி வாழ்வதற்கு ஒரு அடிகூட எடுத்து வைக்கவில்லை! வெற்று ஆர்வத்தைக் காட்டினார்கள்! கைக்கொள்ளும்படியான தீராத வாஞ்சையோ அவர்களுக்கு இல்லை!**

'இவர்களையெல்லாம் பிரித்து எடுக்கும்' அந்த கடினமான செயலை தேவனிடமே விட்டுவிட வேண்டும். ஆவிக்குரிய சோதனை களை, தேவனுடைய ஆவியானவர் மாத்திரமே வைத்திட முடியும். வேத வாக்கியங்களில் திரளான புருஷர்களும், ஸ்திரீகளும் 'அவர்களே அறியாமல்' பரிசுத்த ஆவியினால் சோதிக்கப்பட்டிருக்கிறார்கள். ஆகிலும், பரிசுத்த ஆவியானவரோ ஒரு நபரிடம் கூட "நீங்கள் சோதிக்கப்பட போகிறீர்கள்" என முன் கூட்டியே கூறியதில்லை!

முற்பிதாக்களில் முதல்வரான **ஆபிரகாம்** சோதிக்கப்பட்ட நிகழ்ச்சியைப் பாருங்கள்! கல்தேயர் தேசத்தின் ஊர் என்ற இடத்தைவிட்டு தேவன் புறப்படச் சொன்னபோது, தான் சோதிக்கப்

படுகிறேன் என ஆபிரகாம் அறியவில்லை. அதேபோல், உன் ஏக புத்திரனை மோரியா மலையில் பலியிடு! என ஆண்டவர் ஆபிரகாமிடம் கூறியபோதும், தான் கீழ்படிவதற்கே கட்டளையிடப்பட்டதாக எண்ணினார்! ஆனால், தான் தேவனால் சோதிக்கப்படுவதாக சிறிது கூட அறியவில்லை. அதுபோலவே, தான் சோதிக்கப்படுவதை அறியாமலே பேதுரு சோதிக்கப்பட்டார்! **பவுலும்** அவ்விதமாகவே சோதிக்கப்பட்டார்!

நாம் ஏராளமான சத்தியங்களை அறிந்து கொண்ட பிறகு, பரிசுத்தஆவியானவர் கூறுவார் "**இன்று இந்த மனுஷனுக்கு, நான் ஒரு பரீட்சை நடத்துவேன்!**" என்பார். இஸ்ரவேல் ஜனங்களுக்கு 'காதேஸ் பர்னேயாவில்' பரீட்சை நடந்தது. அவர்களோ, நதியை கடந்து போவதற்குப் பதிலாய், தாங்கள் பரீட்சிக்கப்படுகிறோம் என்பதை அறியாமலே, பின்னிட்டு திரும்பினார்கள். "தாங்களே, தங்களுக்கு 40 - வருட தண்டனையை வருவித்துக் கொண்டோம்" என்பதை அறியாதிருந்தார்கள். எந்த இலக்கும் இல்லாமல், பிரயோஜனமற்ற வாழ்க்கையை, அந்த தரித்திர பாலைவன நிலத்தில் வாழ்ந்து மடிந்தார்கள்!

ஆண்டவர் அவர்களைப் பார்த்து "எல்லோரும் எழுந்து நில்லுங்கள்! கவனம். நான் இப்பொழுது உங்களுக்கு கூறுவது பரீட்சை!" என அவர்களுக்கு கூறவேயில்லை. ஆனால் 'அவர்கள் அறியாமலே அவர்களுக்கு வந்த பரீட்சையில்' வீழ்ச்சியுற்று மடிந்தார்கள்!

ஒரு உண்மை கேளுங்கள்: தேவன் தரும் பரீட்சையில், கிறிஸ்தவ விசுவாசிகளில் 90 சதவீதம் கொண்டோர், பிசாசினால் உண்டான பாவத்திலும், மாம்ச இச்சையிலும் வீழ்ச்சியடைந்தார்கள் என்ற உண்மையை அறிந்து கொள்வது, உங்கள் உள்ளத்திற்கு அதிகமான தெய்வ பயத்தை கொண்டு வர வேண்டாமா?

புடைத்து, சலித்து எடுக்கும் பணியை இன்றும் ஆண்டவர், நாள்தோறும் செய்து வருகிறார் என்ற விழிப்புணர்வை நாம் யாவரும் அடைவது நலம்! தன் ஆவிக்குரிய ஜீவியத்தில் பூரணமடைய வேண்டும் என்ற விருப்பத்தையும், இயேசுவைப் போல் மாற வேண்டும் என்ற தீராத வாஞ்சையும், சத்தியத்தில் நிலை நின்றிட உறுதிகொண்டவர்கள் உங்கள் சபையில் இருக்கிறார்களோ? அப்படியானால், **பரீட்சைக்குரிய கேள்வி,** அவ்வித சபைகளின் மேல் ஜொலித்து நின்று, தேவனுடைய 'சலிப்பு வேலையை' தொடர்ந்து நிறைவேற்றிக் கொண்டேயிருக்கும்! ஆமென்.

*- A.W.டோசர்*

## ‘பாவிகளின் சிநேகிதர்’ கையில் இருங்கள்! அது போதும்!

*குயவனின் கையிலே பாத்திரம் வனையப்படும்*

*நாம் பாவங்களிலிருந்து விடுவிக்கப்பட்டு நமது ஜீவியம் மாற்றப்படாவிட்டால், அதினால் என்ன பிரயோஜனம்? தங்களைக் கிறிஸ்தவர்கள் என்று சொல்லிக் கொள்ளுகிற திரளான மனுஷருடைய ஜீவியத்தை நாம் கவனிக்கும் போது, எவ்வளவு துக்கம்! பற்பல பாவங்களுக்கு அடிமைப்பட்டிருக்கிறார்கள்! பரிசுத்த ஜீவியத்தின் பாக்கியத்தையும் சந்தோஷத்தையும் அறியார்கள்! பாவங்களில் தொடர்ந்து நிலைத்திருப்பது, கிறிஸ்து மார்க்கமல்ல! நாம் எத்தனை ஆராதனைகளுக்குப் போனாலும் என்ன? எத்தனை ஜெபக் கூட்டங்களை, ஓய்வு நாள் வகுப்புகளை நடத்தினாலும் என்ன? எத்தனை பிரசங்கங்களைக் கேட்டாலும் என்ன?* **பாவத்தில் நாம் நிலைத்திருக்கிறவரை** *இவைகளினால் நமக்கு பிரயோஜனம் இல்லை! மற்றவர்களுக்கும் நம்மால் ஆசீர்வாதம் இல்லை! ஆண்டவருக்கும் நம்மால் எவ்வித மகிமையும் இல்லை!*

*பாவஜீவியம் இன்பமாயிருக்கலாம். இலாபமாய் தோன்றலாம்! அதைவிட்டு விலகுவது நமக்குக் கஷ்டமாயிருக்கலாம்! ஆனால்,* **பாவத்தின் வஞ்சகமோ மகா கொடியது.** *பாவம் நிச்சயமாகவே நமக்கும் நமது குடும்பத்துக்கும் சாபம்!*

**பாவத்தால் ஒருபோதும் ஒருவருக்கும் நன்மை இல்லை. கொஞ்சக்காலம் நலமாகத் தோன்றினாலும், சடுதியில் கெட்டுப்போவதற்கே ஏதுவாகும்.**

*பாவம், ஆண்டவரையும் நம்மையும் பிரிக்கும்! இருதயத்தைக் கடினப்படுத்தும். புத்தியை அந்தகாரப்படுத்தும். ஆவி, ஆத்துமா, சரீரம் முழுவதையும் கெடுக்கும்! ஆபத்தையும் சாபத்தையும் கொண்டுவரும். பாவம் வஞ்சனையுள்ளது! அது உண்மையான ஜீவியமல்ல.* **பாவம் என்பது விஷம். அதை விழுங்குவது மோசம்!**

*பாவம் வஞ்சகமாயிருப்பதுபோலவே, மன்னிப்பு கேட்டுக் கொண்டால் போதும் என்பதும் வஞ்சகமே! பிள்ளை விஷத்தை விழுங்கிவிடும்போது, மன்னித்தால் பிழைத்துக் கொள்வானோ? அவன் அதை வாந்தி பண்ண வேண்டுமே!*

*பாவ ஜீவியத்தை என்னால் முற்றிலும் விட்டுவிட முடியுமோ? என்று கேட்கிறோம். இந்தக் கேள்வியே தவறானது!*

*பாவத்தை விட்டுவிடுவதும், பரிசுத்தமாய் நடப்பதும் நம்மால் ஆகிற காரியமல்ல! கர்த்தர் நம்மில் செய்யவேண்டிய வேலையை நாம் செய்யப் பார்ப்பது பிசகு. கிறிஸ்துவின் கையில் உங்களை*

*விட்டுவிடுங்கள். உங்கள் பாவங்களை மன்னிப்பவர் அவர். உங்களைக் கழுவுகிறவர் அவர். உங்கள் இருதயத்தை மாற்றுகிறவர் அவர். உங்களுக்குள் தமது ஆவியை வைத்து உங்களை மறுரூபமாக்குகிறவர் அவர். உங்களைப் பலப்படுத்திப் பாவத்தின்மேல் வெற்றி கொடுப்பவர் அவர்! நற்கனிகளினால் உங்கள் ஜீவியத்தை அலங்கரித்து பிறருக்கு உங்களை ஆசீர்வாதமாக்குகிறவர் அவர்! அவரே உங்களை முற்றிலும் ஆண்டுகொள்ள இடங்கொடுங்கள். அவர் உங்களுக்குள் வசிக்கட்டும். அவர் உங்களுக்குள் போதிக்கட்டும். அவரே உங்களை நடத்தட்டும். அவரே உங்களைக் காக்கட்டும். அவரே உங்களை உபயோகிக்கட்டும். அவரே உங்கள் மகிமையாக விளங்கட்டும்! இது, எவ்வளவு பாக்கியமான ஜீவியம்!*

'எப்படியாகிலும்' மகிமையில் பிரவேசித்திடுவோம் என்கிறார்கள். **மகிமையின் பாதையில்** நடக்க மனமில்லாவிட்டால், மகிமையின் இராஜ்ஜியத்தில் பிரவேசிப்பது எப்படி? சொஸ்தமாக வேண்டும் என்கிற விருப்பம் மாத்திரம் அவனுக்கு இருந்தது. அசையவோ எழுந்து நடக்கவோ பலமில்லை. **விரும்பின அவனுக்கு, நடக்கக்கூடிய ஆவியின் பலத்தை கர்த்தரே கொடுப்பார்.**

நமது ஜீவியத்திலாவது ஊழியத்திலாவது எதை அவருடைய மகிமைக்காக விரும்புகிறோமோ, கிருபையுள்ள ஆண்டவர் அதை நமக்குக் கொடாதிருப்பதில்லை!

இதை வாசிப்பவர்களை அருமை இரட்சகர் ஆசீர்வதிக்க வேண்டுமென்பதே என் முழு வாஞ்சை. **பாவிகளின் சிநேகிதர்** ஒரு ஆத்துமாவைத் தமக்குச் சொந்தமாக்கிக் கொண்டால், அதைப்போல வேறு எதுவும் ஆனந்தமில்லை!

கர்த்தர், எரேமியா தீர்க்கதரிசிக்குக் காண்பித்த குயவன் திருஷ்டாந்தம், அநேக சமயங்களில் என்னை உயிர்ப்பித்திருக்கிறது. தீர்க்கதரிசி, குயவன் வீட்டில்போய் பார்த்தபோது, அவன் வனைந்து கொண்டிருந்த மண்பாத்திரம் அவன் கையில் கெட்டுப்போயிற்று! அவன் அதைத் தூர எறிந்துவிடாமல் திரும்ப எடுத்து மறுபடியும் வேறே நல்ல பாத்திரமாக வனைந்தான். கர்த்தர் தீர்க்கதரிசியைப் பார்த்து : "இந்தக் குயவன் செய்ததுபோல நான் உங்களுக்குச் செய்யக் கூடாதோ? **களிமண், குயவன் கையில் இருக்கிறதுபோல** நீங்கள் என் கையில் இருக்கிறீர்கள்" என்றார் (எரேமியா 18). கெட்டுபோன பாவிகளாகிய நமக்கு இது எவ்வளவு ஆறுதல்! நமது பாவ ஜீவியத்தால் நம்மை எவ்வளவோ கெடுத்திருந்தாலும், இனஜனத்தார் நம்மை ஆகாதவர்கள் என்று தள்ளிவிட்டாலும், நமது பாழான ஜீவியம் நமக்கே

*அருவருப்பாகி, உயிரோடிருப்பதிலும் செத்துப்போவது நல்லதென்று நாம் நினைத்திருந்தாலும், சாபத்துக்கேதுவான நம்மை ஆசீர்வாத பாத்திரங்களாக்க ஆண்டவரால் கூடும்!*

**அந்தக் குயவன் செய்ததுபோல், நான் உங்களை மறுபடியும் நல்ல பாத்திரங்களாகச் செய்யக்கூடாதா? என்று கர்த்தர் கேட்கிறார். பரம குயவனாகிய கிறிஸ்துவின் கையில் களிமண்ணைப்போல் நம்மை வைத்திடுவோமாக!**

*அவர் தமது வேலையை ஆரம்பித்து "பரிசுத்தமாக்கப்பட்டதும்,* **எஜமானுக்கு உபயோகமானதும்,** *எந்த நற்கிரியைக்கும் ஆயத்தமாக்கப் பட்டதுமான கனத்துக்குரிய பாத்திரமாக்குவார்" (2தீமோ.2:21). இப்படிப்பட்ட ஜீவியமே நமக்கும் நமது குடும்பத்துக்கும், இம்மைக்கும் மறுமைக்கும் ஆசீர்வாதம்! அப்போது, சகல நிர்பந்தங் களும் நீங்கும். சகல ஆசீர்வாதங்களும் தங்கும்! இதுவே கிறிஸ்து மார்க்கம். இதுவே மோட்ச வாசல்! இதுவே பாக்கியமான ஜீவியம்! உங்களை இவ்விதமாக ஆசீர்வதிப்பதே ஆண்டவருக்குப் பிரியம். இந்த ஜீவியத்தில் பிரவேசித்தவர்களுக்குத்தான் இதன் பாக்கியமும் ஆசீர்வாதமும் தெரியும். மற்றவர்களுக்கு என்ன தெரியும்? பெய ரளவுக்கு கிறிஸ்தவர்களாயுள்ளவர்களின் திரளான தொகை, கிறிஸ்து மார்க்கத்துக்கு பெரிய தடை! கர்த்தர் அவர்களுக்கு இரங்குவாராக!*

*- பரமானந்தம் ஐயர்*

---

## தேவனிடம் கொண்டிருந்த 'ஆதி அன்பை' இழந்தது ஏன்?

*இழந்ததை 'நாம்' மீட்பதே தேவசித்தம்*

*சில வருடங்களுக்குப் பிறகு, கிறிஸ்துவுக்கு அனலாய் ஜீவித்த இரண்டு நண்பர்களை நான் சந்தித்தபோது, என் கிறிஸ்தவ ஜீவியத்திற்கு எச்சரிப்பு பெற்றேன். அன்று மாலை, வெளி மாநிலத்தில் பணியாற்றிய* **ஒரு காவல்துறை உயர் அதிகாரி** *என்னை சந்திக்க வந்தார். 20 வருடங்களுக்கு முன்பு நான் அவரைப்பற்றி அறிந்த நல்ல சாட்சிகளை நான் மறக்கவே இல்லை! அந்த நாட்களில், அவர் கிறிஸ்துவை அறிந்த இளமைப்பருவத்தில், ஓர் மிகுந்த வைராக்கியமான கிறிஸ்தவராய் இருந்ததை நினைவுகூர்ந்தேன். வேறு மதத்தைச் சார்ந்த அந்த நண்பர், ஏராளமான பிரச்சனைகளை தன் வாழ்வில் சந்தித்தும், கிறிஸ்துவின் சாட்சியினிமித்தம், அவரது அலுவலகத்தில் ஏராளமான துன்பங்களை சகித்து, வெற்றியுள்ள கிறிஸ்தவ ஜீவியம் செய்தார்!* **தன் விசுவாசத்தை காத்துக்கொள்ள அதிக கிரயம் செலுத்திய நண்பர்** *என்றே நான் கூறுவேன். அர்ப்பணிக்கப்பட்ட அவருடைய ஜீவியம், அந்நாட்களில் எனக்கு*

மிகுந்த சவாலாய் இருந்தது!

வெளிமாநிலத்திற்கு காவல்துறை உயர் அதிகாரியாய் அவர் மாற்றப்பட்ட பின்பு, இப்போதுதான் அவரை மீண்டும் சந்தித்தேன். என்னை சந்தித்துப் பேசிய அந்த நண்பர் துக்கமாய் காணப்பட்டார். என்னைப் பார்த்து "**அன்பு சகோதரா, என் ஆதி அன்பை இழந்துவிட்டேன்**" என தலை கவிழ்ந்து கூறினார். அதிர்ச்சியடைந்த நான் "அன்பு சகோதரனே, நீங்கள் தேவன் மீது கொண்டிருந்த வைராக்கியமும், அழியும் ஆத்துமாக்கள் மீது கொண்ட கரிசனையும், இன்றுவரை எனக்கு சவாலாய் இருந்து வருகிறது! அப்படியிருக்க, உங்களுக்குப் பின்மாற்றம் எப்படி ஏற்பட்டது?" என, வருத்தத்துடன் கேட்டேன்.

அதற்கு அவர் "நான் சென்ற வெளிமாநிலங்களில் உள்ள சபைகளில் மிகுந்த சுறுசுறுப்புடன் ஊழியம் செய்தேன். காவல்துறையின் மிக உயர்ந்த பணியில் இருந்ததால், **நான் சபைக்கு ஒழுங்காய் செல்ல முடியாமல் போனது!** இதுவே எனது முதலாவது வீழ்ச்சி! அதை அடுத்தடுத்து, பல வீழ்ச்சிகள் என்னைத் தொடர்ந்தன. என்னுடைய வீட்டிலும் அதிக பிரச்சனை ஏற்பட்டது. படிப்படியாய் வேத வாசிப்பும் ஜெபமும் குறைந்தது! என்னுடைய ஆதி அன்பை இழந்துவிட்டேன். உங்கள் உத்தம சாட்சியை நான் அறிவேன். தயவுசெய்து எனக்காக ஜெபம் பண்ணுங்கள்" என உள்ளம் உடைந்து கேட்டார். இந்த அருமையான சகோதரன் 'ஆதி அன்பை நான் இழந்தேன்' எனக்கூறிய வார்த்தை, என் உள்ளத்தை ஆழமாய் தொட்டது!

மேலும், சில வருடங்களுக்கு முன்பாக ஒரு மிஷனெரியைச் சந்தித்தேன். அவர் தன்னுடைய எல்லாவற்றையும் இழந்து, மலைஜாதி மக்களுக்கு மிஷனெரி ஊழியம் செய்து வந்தார். அவருடைய மிஷனெரி ஸ்தலத்திற்கு மூன்று முறை சென்று அவரோடு ஊழியம் செய்தேன். அங்குள்ள மலைஜாதி மக்கள் மீது அவர் கொண்டிருந்த ஆத்தும பாரத்தைக் கண்டு நான் வெகுவாய் சவாலிடப்பட்டேன்.

25-வருடங்கள் மலைஜாதி மக்கள் மத்தியில் ஊழியம் செய்த அவருடைய சபையில் சுமார் 200 விசுவாசிகள் இருந்தனர். அத்தனைபேரும் விக்கிரகத்தை வணங்கிய ஆதிவாசிகள்! இவ்வித அருமையான நிலையில், பணம் கொடுத்து ஆதரிக்கும் ஒரு சபையோடு தன் சபையை இணைத்துக்கொண்டார். அதுவே அவரது ஊழிய வீழ்ச்சியின் ஆரம்பம்!

இப்போது அவர் தொடர்ந்து அங்கேதான் இருந்து ஊழியம் செய்தாலும், தன் அனல் கொண்ட ஆதி அன்பை இழந்துவிட்டார். நான் தற்செயலாய் அங்கு சென்றபோது, குளிர்ந்துபோன அவரது தேவ வைராக்கியத்தைக் கண்டு வெகுவாய் மனம் வருந்தினேன்.

*ஆதிநாட்களில் அவர் கொண்டிருந்த தியாகம், தேவ அன்பு இப்போது அவரிடம் நான் காண முடியவில்லை.* **சத்துருவாகிய பிசாசு, ஆடம்பர செல்வத்தை அவருக்கு முன்பாக காண்பித்து அவரது அனலான ஆதி அன்பை பறித்துவிட்டான்!**

*நம் ஆவிக்குரிய ஜீவியத்தில் 'பரதேசியாக வாழும் நம் பயணத்தில்' மேலே நான் குறிப்பிட்ட இரண்டு சகோதரர்களைப் போலவே, எத்தனையோ பல காரியங்களினிமித்தம் நாம் யாவருமே நம் ஜீவியத்திலும் ஊழியத்திலும் 'நம் ஆதி அன்பை இழந்து விட முடியும்' என்ற* **அபாய எச்சரிப்பை** *நான் கற்றுக்கொண்டேன். நான் பெற்ற எச்சரிப்பையே உங்களுக்கும் ஆலோசனையாக சொல்ல விரும்புகிறேன். அது என்னவெனில், பல வருடங்களுக்கு முன்பு நாம் கர்த்தருக்கு முன்பாக எவ்வாறு ஜீவித்தோம்? எவ்வாறு ஊழியம் செய்தோம்? என்ற கேள்வியை உங்களுக்குள் கேட்டுப்பார்த்து, அதற்கு விடையாக* **'இப்போது' நான் எவ்வாறு ஜீவிக்கிறேன்? 'இப்போது' நான் எவ்வாறு ஊழியம் செய்கிறேன்?** *என கேள்வி கேட்டு அதற்கு உங்கள் பதிலை கண்டுபிடியுங்கள்.*

*உங்களுக்கு உதவும்படி, சில கேள்விகளை நீங்களும் கேட்டுப் பார்க்க விரும்புகிறேன். உங்களின் ஆழமான ஜீவியத்திற்குரிய வீழ்ச்சியை, இந்த மேலோட்டமான இந்த கேள்விகளை வைத்தே கண்டுபிடித்துவிட முடியும் என்றே நான் நம்புகிறேன்:*

*1) நான் முன்பு அதிக நேரம் ஜெபித்திட வாஞ்சை கொண்டிருந்ததைப்போல், இப்போதும் அதே* **ஜெப வாஞ்சை** *எனக்குள் இருக்கிறதா?*

*2) வேதத்தை வாசித்த பின்பு, அன்று மகிழ்ச்சியுடன்* **தியானித்ததைப்போல** *இன்றும் மகிழ்வுடன் தியானிக்கிறேனா?*

*3) அன்று, பிறரிடம் நான் ஒப்புரவாகுவதற்கு அதிக பிரயாசம் எடுத்துக்கொண்டதைப்போல், பிறரிடம் நடந்துவிட்ட தவறுதலுக்காக விரைந்து சென்று முன்புபோலவே* **ஒப்புரவாகிறேனா?** *குறிப்பாக, என் குடும்பத்தாரிடம், இப்போதும் என்னைத் தாழ்த்தி ஒப்புரவாகிட முடிகிறதா?*

*4) முன்புபோலவே இப்போதும் சுவிசேஷத்தை தைரியமாய் பேசி,* **ஆத்துமாக்களை ஆதாயம் செய்யும்** *பாரம் கொண்டவனாக இருக்கிறேனா?*

*5) தேவன் மீது கொண்ட அன்பினிமித்தமும், மனபாரத்தினிமித்தமும் அன்று நான்* **உபவாசித்து ஜெபித்ததைப்போலவே,** *இன்றும் நான் உபவாசித்து ஜெபிக்கிறேனா?*

*6) தூய ஆவியின் பெலத்தால், நான் முன்பு வாழ்ந்ததைப்போலவே என் வீட்டிலும், என் அலுவலகத்திலும் இப்போதும் கிறிஸ்துவுக்கு* **சாட்சியாக** *வாழ்கிறேனா?*

*7) முன்பு நான்* **கிறிஸ்துவை முதன்மைப்படுத்தி** *வாழ்ந்ததைப் போலவே இன்றும் வாழ்கிறேனா? அல்லது சற்று கிறிஸ்துவை ஒதுக்கி வைத்துவிட்டு,* **இந்த உலகத்தின் காரியங்களை முதன்மைப்படுத்தி வாழ்கிறேனா?**

*8) முன்பு போலவே இப்போதும், கர்த்தர் என்னை உணர்த்தியவுடன் அதை திருத்திக்கொள்ளும் உணர்வுள்ள* **இருதயம்** *என்னிடம் உண்டோ?*

*9) அன்று என் ஜீவியம் முழுவதையும் கர்த்தருடைய பாதத்தில் 'சரணாகதியாக' என்னை* **முற்றிலும் தத்தம் செய்து வாழ்ந்த** *பகுதியில், இப்போது ஏதேனும் குறைவுபட்டுள்ளதா?*

*10) நான் கர்த்தருக்காக ஊழியம் செய்திடும் ஆத்தும ஆதாய பணியில்,* **எனக்கென்று ஒரு லாபமோ அல்லது என் பெயர் புகழோ** *இப்போது நாடுகிறவனாய் மாறிவிட்டேனா?*

*இந்த பத்து கேள்விகளுக்கு, நேர்மையாக பதில் கூறுங்கள். இதில் யாதொரு காரியத்தில் தேவனிடம் கொண்ட "ஆதி அன்பை" இழந்ததாக நீங்கள் கண்டீர்களானால், எந்த பகுதியில் நீங்கள் வீழ்ச்சியடைந்தீர்கள்? என்பதை உறுதி செய்யுங்கள்! பின்பு, அந்தப் பகுதியிலிருந்து மனம் திரும்புங்கள்! இவ்வாறு செய்து முடித்தவுடன் "உங்கள் ஆதி அன்பின் கிரியைகளை" மீண்டும் செய்யத் துவங்குங்கள்! கர்த்தர் உங்களோடிருப்பார்!*

*- C.பர்னபாஸ் (EUSI)*

---

## 'தீண்டாமை' ஒழித்த நம் ஆண்டவர்!

*யாதொருவரைக் கண்டு 'ஒதுங்குவது' இரக்கமற்ற செயல்*

*மலைப்பிரசங்கத்தை முடித்தவுடன், தொழுநோயாளி ஒருவரை இயேசு தொடுகிறார்: "அவர் மலையிலிருந்து இறங்கியபோது பெருந்திரளான மக்கள் அவரைப் பின்தொடர்ந்தார்கள். அப்பொழுது தொழுநோயாளி ஒருவர் வந்து அவரைப் பணிந்து, 'ஐயா, நீர் விரும்பினால் என் நோயை நீக்க உம்மால் முடியும்' என்றார். இயேசு தமது கையை நீட்டி அவரைத் தொட்டு, 'நான் விரும்புகிறேன்; உனது நோய் நீங்கட்டும்!' என்றார். உடனே அவரது தொழுநோய் நீங்கியது! (மத்.8:1-3). இதே சம்பவம் மாற்கு சுவிசேஷத்தில் சொல்லப்பட்ட இடத்தில்,* **இயேசு "மனதுருகி" அவரைத் தொட்டார்**

*என்று வாசிக்கிறோம் (மாற்கு 1:41). தொழுநோயாளியைத் தொடுவதை மோசேயின் நியாயப்பிரமாணம் அனுமதிப்பதில்லை. பொதுவான குடியிருப்புகளுக்குத் தள்ளி, தூரத்தில்தான் அவர்கள் வசிக்க வேண்டும். எதிர்ப்படுவோர் எவரும் அவர்களுக்கு அருகில் வந்துவிடாதபடி, "தீட்டு, தீட்டு" என்று அவர்கள் குரலெழுப்ப வேண்டும் (லேவி.13:45,46).*

**இந்தத் தொழுநோயாளியை இயேசு தொட்டிருக்க அவசியமில்லை. ஒரு வார்த்தை சொல்லியிருந்தால் அற்புதம் நிகழ்ந்திருக்கும். ஆகிலும், தமது மனதுருக்கத்தை வெளிப்படுத்திக்காட்டவே இயேசு அவரைத் தொட்டார்.**

*மத்தேயு சுவிசேஷத்தின் அடுத்த 9-ம் அத்தியாயத்தில் இரத்தப் போக்கு உள்ள ஒரு பெண்ணை இயேசு சுகப்படுத்தினார்.* **அவள் அவரைத் "தொட்டபோது"** *இவ்வற்புதம் நிகழ்ந்தது (மத்.9:20-22). லூக்கா இதனை இன்னும் அழகாய் விவரிக்கிறார்(லூக்.8:43-48). அவரது 'மேலாடையின் ஓரத்தை அவள் தொட்டபோது' சுகமடைந்தாள் (வச.44). "என்னைத் தொட்டது யார்?" என்றார் இயேசு.அவ்வளவு கூட்டம் அவரை நெருக்கிக்கொண்டிருந்த வேளையில் இயேசுவின் இக்கேள்வி அவர்களுக்கு அர்த்தமுள்ளதாய் தெரியவில்லை. அவரிடமிருந்து வல்லமையை வெளிக்கொண்டுவந்த விசுவாசத் தொடுதலையே அவர் குறிப்பிட்டார்! அப்பெண்மணிக்குத் தேவையான ஆரோக்கியம் கிடைத்துவிட்டதென்று இயேசு அறிந்தும், அதனை வெளிப்படையாக்கும்படியே "என்னைத் தொட்டது யார்?" என்றார். இதோ, அதற்குக் காரணம்: மாதவிடாய்க் காலம் தவிர்த்து மற்ற நேரங்களில்* **இரத்தப்போக்குள்ள பெண் தீட்டானவள்** *என்பது மோசேயின் பிரமாணம். அவள் தீண்டத்தகாதவள் ஆகிவிடுகிறாள்(லேவி15:25-27).*

*"தீண்டத்தகாதவர்களைக் குணமாக்கிய" மேற்கண்ட இரு சம்பவங்களுக்கும் இடையில் (மத் 8,9), மத்தேயு 9:13-ல் இயேசு உச்சப் படிப்பினையைத் தருகிறார்: "பலியை அல்ல, இரக்கத்தையே விரும்புகிறேன் என்பதன் கருத்தை நீங்கள் போய் கற்றுக்கொள்ளுங்கள்" என பரிசேயர்களை கடிந்து கொண்டார்! "பலி" என்பது இங்கு மார்க்க சடங்கைக் குறிக்கும். பழைய ஏற்பாட்டு வசனத்தையே இயேசு இச்சந்தர்ப்பத்தில் பயன்படுத்தினார். ஓசியா 6:6, "உண்மையாகவே நான் விரும்புவது பலியை அல்ல; இரக்கத்தையே விரும்புகிறேன்; எரிபலிகளை விட தேவனை அறியும் அறிவையே நான் விரும்புகிறேன்" என கூறினார். மத்தேயு 12:7-ல் இதே வசனத்தை இயேசு மேற்கோள் காட்டினார்.*

*இயேசுவும் அவரது சீடரும், ஓய்வு நாளொன்றில் விளைநிலங்கள்*

*வழியாய் நடந்து சென்றனர். அப்பொழுது சீடர்கள் மெல்லுவதற்காய் கதிர்களைக் கொய்தார்கள். ஓய்வுநாளில் "செய்யத்தகாததை" அவர்கள் செய்துவிட்டதாகப் பரிசேயர் அவர்கள்மீது குற்றம் சாட்டினர். இயேசு தமது சீடர்கள் செய்ததை ஆதரித்துக் கூறியபோது: "**பலியை அல்ல, இரக்கத்தையே விரும்புகிறேன்** என்பதன் கருத்தை நீங்கள் அறிந்திருந்தால் குற்றமற்ற இவர்களைக் கண்டனம் செய்திருக்கமாட்டீர்கள்" என்றார் (மத்தேயு 12:7).*

*இதற்கு முந்திய இடத்தில் (மத்.9:13) இவ்வசனத்தை அவர் மேற்கோள் காட்டியது, பாவிகளோடு அவர் சாப்பிட்டதற்கு எதிர்ப்பாய் பேசப்பட்ட வேளையாகும். ஆம், தேவ பக்தியற்றோரிடமிருந்து பிரிந்து வாழ்வதற்குப் பதிலாக, அவர்களிடமிருந்தே ஒதுங்கி வாழ்வதை அவர் கண்டித்தார். மேலும் இப்போது 'நியாயப்பிரமாண' சட்டத்திட்ட ஆவியின்படி ஒதுங்கி வாழும் கடினத்தையும் இயேசு மத்தேயு12:7-ல் கண்டித்தார்! யாதொருவரை 'ஒதுக்குவது' இரக்கமற்ற செயல் என்பதை இயேசு நேர்த்தியாய் நமக்கு போதித்துள்ளார்!*

*- R.ஸ்டான்லி BYM*

---

## 'மானிடரால் பாதிக்கபடாத' நிலைத்திருக்கும் விசுவாசம்!

*கிறிஸ்துவின் மீதான 'கற்பாறை' விசுவாசம்*

*தீமோத்தேயுவின் பாட்டி 'லோவிசாளின்' கணவர், விசுவாசி அல்ல! ஆகிலும் தன்னிடமுள்ள, விசுவாசத்தைக் காத்து நடந்தது மல்லாமல், அதைத் தன் மகள் ஐனிக்கேயாளுக்குள் நிலைத்திருக்கச் செய்தாள் லோவிசாள் பாட்டி! அதுபோலவே, ஐனிக்கேயாள் கணவர் ஒரு புறஜாதி கிரேக்கர்! (அப்.16:1). ஆகிலும், கணவர் விசுவாசியாய் இல்லாத சூழ்நிலையிலும், "தன் விசுவாசத்திற்கு ஏற்பட்ட துன்பங் களைச் சகித்து" கணவரின் 'கிரேக்க மார்க்கத்திற்கு' ஐனிக்கேயாள் சென்றுவிடவில்லை! தன்னிடமுள்ள விசுவாசத்தில் நிலைத்திருந்து, அந்த 'மாயமற்ற விசுவாசத்தை' மகன் தீமோத்தேயுவிடம் நிலைத் திருக்கச் செய்தாள் அவனின் தாய், ஐனிக்கேயாள்!*

**மாயமற்ற விசுவாசம் பெற்றவர்கள், தேவனுடைய பார்வைக்கு முன்பாக மாத்திரமே ஜீவிப்பார்கள்! லோவிசாள் பாட்டி, அவள் மகள் ஐனிக்கேயாள், அவள் மகன் தீமோத்தேயு ஆகியோரின் விசுவாசம், யாதொரு சூழ்நிலை யையும், யாதொரு நபரையும் சார்ந்திருக்கவில்லை!**

*எனவேதான், மாறுபட்ட தங்கள் வீட்டு சூழ்நிலைகளில், அவர்கள் தன் தன் விசுவாசத்தை விட்டு விலகவோ, இயேசுவை விட்டு தூரம் செல்லவோ, ஊழியத்தைக் கைவிடவோ, சபையிலிருந்து வழி விலகவோ*

*இல்லை! அவ்வித மாறாத விசுவாசமே "மாயமற்ற விசுவாசம்".* **ஜான் பணியன் குறிப்பிடும் 'கிறிஸ்தியான்'** *மேற்கொண்ட மோட்ச பயணத்திற்கு, அவன் மனைவி வர மறுத்தபடியால், தன் பயணத்தை அவன் நிறுத்தாமல், மரணபரியந்தம் உண்மையுள்ளவனாய், தன் விசுவாச ஜீவிய பயணத்தை ஜெயமாய் முடித்தான்! மாயமற்ற விசுவாசம் கொண்டவர்களுக்கு, "உலகம் பாத்திரமாயிருக்கவில்லை!" என இருந்தபோதும், அவர்களோ "விசுவாசத்தில் நற்சாட்சி பெற்றார்கள்!" என எபி.11:38,39 கூறி மகிழ்கிறது!*

*தன்னை முழுவதும் அர்ப்பணிக்காமல், பரிசுத்தாவியானவருக்கு விரோதமாய் பொய்யுரைத்த* **அனனியாவினால், அவன் மனைவி சப்பீராள்** *பாதிக்கப்பட அவசியமேயில்லை! ஆனால் அவளோ, பாதிக்கப்பட்டாள்! தன் கணவனின் பாவத்தில் உடன்பட்டாள்! தன் கணவனுடைய வீழ்ச்சியில் "ஒருமனப்பட்ட" சப்பீராளுக்காய் பேதுரு வருந்தினார்! (அப்.5:8-9).*

*ஆனால், நீதிமான் லோத்து, தன் மனைவி 'ஜீவன் தப்ப' தன்னோடு ஓடிவருவதை நிறுத்தி, பின்னிட்டு பார்த்தபோது....* **லோத்து அவளுக்கு உடன்படாமல்,** *தன் நியமன ஓட்டத்தை ஓடி முடித்தான்!*

**ஒரு குடும்பத்தில் அல்லது சபையில் யாரோ ஒருவர் வழிதவறிச் சென்றால், தானும் அவர்களோடு வழிவிலகிச் செல்லும் 'மாய விசுவாச' மாந்தர்கள் இன்றைய கடைசி நாட்களில் மலிந்து கிடக்கிறார்கள்!**

*இவர்கள் எத்தனை வருடம் கிறிஸ்தவ குடும்பத்தில் வாழ்ந்தார்கள்? எத்தனை வருடம் சபையில் இருந்தார்கள்? என்ற கணக்கெல்லாம் அவர்களுக்கு கைக்கொடுப்பதில்லை! ஏனெனில் அவர்களின் ஆரம்ப விசுவாசம் தொடங்கியே அதில், 'மாயம்' ஒட்டியிருந்தபடியால், அவர்கள் மாயமான விசுவாசிகளாய், பிற்காலத்தில் கெட்டுப் போகிறவர்களோடு சேர்ந்து கெட்டுப் போகிறார்கள்!*

*மாயமற்ற விசுவாசம் கொண்டவர்கள், யாராலோ அல்லது எந்தவித சூழ்நிலையாலோ பாதிப்படுவதில்லை! இவர்களுக்கே* **"நான் விசுவாசிக்கிறவர்** *இன்னாரென்று அறிவேன்!" என்ற பெருமகிழ்ச்சியான அறிக்கை சொந்தமாகிறது!(1தீமோ.1:12). இவ்வாறு "தன்னிடத்தில் ஒப்புவிக்கப்பட்ட அந்த நற்பொருளை (மாயமற்ற விசுவாசத்தை) நமக் குள்ளே வாசம் பண்ணுகிற பரிசுத்த ஆவியினால் காத்துக் கொண்டவர்கள்!" (2தீமோ.1:14), மெய்யாகவே பாக்கியவான்கள்! இவர்களைக் கொண்டே "பரிசுத்த நகரமாகிய எருசலேம்" சபை, கட்டப்பட முடியும்!*

*- T.ரத்தினகுமார்*

## மைலாடி பட்டணத்தை கிறிஸ்துவுக்கு சொந்தமாக்கிய இந்து பக்தன்

# மகராசன் வேத மாணிக்கம்!



கன்னியாகுமரி மாவட்டத்தைச் சேர்ந்த மைலாடி ஊரில் பிறந்தவர்தான் மகராசன் வேதமாணிக்கம். அவருடைய முழு குடும்பமும் சிவ பக்தர்களாயிருந்தார்கள். மைலாடி கிராமத்தில் உள்ள பள்ளியில் சிறப்பாய் படித்து முடித்தார். மைலாடியிலிருந்து, 'ஏலங்கமணியன்' என்ற தேவதையை வணங்குவதற்கு வருடம்தோறும் குடும்பமாய் வள்ளியூர் கிராமத்திற்கு செல்வார்கள். பல இந்து ஆலயங்களிலுள்ள சித்தாந்த விளக்கங்களை படித்தும், அவர் உள்ளத்தில் அமைதி ஏற்படவில்லை. அங்கிருந்து சிதம்பரம் நகரத்திற்கு யாத்திரை செய்து, நடராசர் ஆலயத்திற்குச் சென்றால் சமாதானம் கிடைக்கும் என கேள்விப்பட்டு தன் நண்பரோடு பயணம் மேற்கொண்டார். அங்குள்ள மைலாடி மக்கள் "நீ அவ்வளவு தூரம் சென்று உயிரோடு திரும்புவது கடினம்" என கூறினாலும் 'நான் எப்படியும் தெய்வத்தை தரிசிப்பேன்' என்ற ஆத்ம வேட்கையோடு, சில மாதங்கள் கழித்து சிதம்பரம் சென்றடைந்தார். சிதம்பர சாமி தர்ஷன் பார்த்த பிறகும் அவர் உள்ளத்தில் அமைதி ஏற்படவில்லை. அதில் மனச்சோர்வடைந்த வேத மாணிக்கம் ஆலய சுவரின் ஓரத்தில் சுருண்டு படுத்துவிட்டார். அன்று இரவு ஏற்பட்ட கனவில் "வெண் உடை தரித்த ஒருவர், ஒரு பிரம்பினால் அவரை அடித்து எழுப்பி 'இது உனக்குரிய ஸ்தலம் அல்ல, உடனே தஞ்சாவூருக்குச் சென்று மெய் தெய்வத்தை கண்டுபிடிப்பாயாக' என்று கூறி மறைந்தார்".

தஞ்சாவூரிலுள்ள அவருடைய உறவினர்கள் கிறிஸ்தவ ஆலயத்திற்கு சென்று ஆண்டவரை வழிபாடு செய்திட புறப்பட்டபோது வேத மாணிக்கமும் கூடவே சென்றார். தெய்வத்தை தேடும் காவி உடையை உடுத்தியிருந்த அவர், ஆலயத்திற்கு உள்ளே போகாமல், வாசலில் நின்று மிக உண்ணிப்பாய் போதகர் பேசுவதை கவனித்து கேட்டார்கள். அந்த போதகரோ தன் பிரசங்கத்தில் "இயேசுவிடம் வாருங்கள், அவரிடமே வந்து விடுங்கள்! அவரே மெய்யான தெய்வம்! இந்த உலக இரட்சிப்புக்கு தரப்பட்ட இரட்சகர் இவரே" என்ற அவரது பிரசங்கம் வேதமாணிக்கத்தின் இருதயத்திற்குள் ஊடுருவிச் சென்று, அவர் தேடிய நிரந்தரமான சமாதானத்தை பெற்றுக்கொள்ள செய்தது! மிகுந்த மகிழ்ச்சியோடு தன் சொந்த ஊருக்குத் திரும்பிய வேதமாணிக்கத்திற்கும் அவரோடு வந்த நண்பருக்கும் பேரதிர்ச்சி காத்திருந்தது. ஊரைவிட்டு சென்று சில மாதங்களாய் வராதிருந்த அவர்கள் இருவருக்கும் "இறப்பு சடங்குகளை" மைலாடி மக்கள் செய்து கொண்டு இருந்தார்கள். ஆனால், இவர்களை உயிரோடு கண்ட மக்கள் அந்த ஊரில் மகிழ்ச்சி கோலாகலம் செய்தார்கள். பின்பு வேதமாணிக்கம் பேசும்போது தான் தெய்வத்தை தேடி அலைந்த நிகழ்ச்சிகளை கூறினார். கடைசியாக மிகுந்த சத்தமாய் 'இயேசுவே அந்த மெய்யான தெய்வம்' என கூறி, அந்த ஊர் மக்களுக்கு சுவிசேஷத்தை பிரசங்கித்தார். சிலர் மாத்திரமே கிறிஸ்துவை ஏற்றுக் கொண்டார்கள். ஆகிலும், பல துன்ப போராட்டத்தின் மத்தியிலும் திருவாங்கூர் மன்னர் அனுமதி பெற்று, தூய தேவாலயத்தை மைலாடியில் கட்டினார்கள். ஐயர், குரு என்ற பட்டம் ஏதும் இல்லாமல், தனி மனிதனாய் மைலாடி மக்களுக்கு வல்லமையான ஊழியம் செய்து, ஜனவரி 27, 1827-ம் ஆண்டு மரித்தார்.

- நிரூபித்து வாழ்ந்த கிறிஸ்துவின் தாசர்கள்

## ‘கீழ்ப்படியாமல் போனேனே’ என்ற அங்கலாய்ப்பா? கவனம்!

மன நோயாளிகளைப் பராமரிக்கும் விடுதியொன்றிலுள்ள ஒரு மனிதனைக் குறித்துக் கூறப்பட்டதை, பல ஆண்டுகளுக்கு முன்னர் நான் கேள்விப்பட்டிருக்கின்றேன். அவன் எப்பொழுதும் "ஐயோ, நான் மட்டும் கீழ்ப்படிந்திருந்தால்...." என்று சதா அழுது கூக்குரலிட்டுக் கொண்டேயிருப்பானாம். நாள் முழுவதும் அவனின் கதறல் இது ஒன்றாக மட்டுமே இருந்தது! அந்த மனநோய் வார்டிலிருந்த அனைவரையுமே, அவனது கூக்குரல் சஞ்சலப்படுத்துவதாய் இருந்தது!

அந்த மனிதனின் ஆறாத துயரத்தின் பின்னனி சரித்திரம் இதுதான்: அம்மனிதன் ஒரு ரயில்வே கம்பெனியால் நதியின் குறுக்காகக் கட்டப்பட்டதொரு தொங்கு பாலத்தைக் காக்கும் பணியில் ஈடுபடுத்தப்பட்டிருந்தான். படகு வரும்போது, தொங்கு பாலத்தை திறப்பதும், ரயில் வரும்போது தொங்கு பாலத்தை மூடுவதுமே, அவனுக்குத் தரப்பட்ட பணியாக இருந்தது. ஒருசமயம் விரைவாக ஒரு ரயில், குறிப்பிட்டதான ஒரு மணி வேளையில் அந்த தொங்கு பாலத்தைக் கடந்து செல்லவிருப்பதாக அவனுக்கு முன்கூட்டியே தகவல் கொடுத்தனர். பாலத்தைக் கண்காணித்து வந்த அவன், நதியில் படகுகளை செலுத்தும் சில படகோட்டிகளின் விடாப்பிடியான வேண்டுகோள்களுக்கு இணங்கி அந்த தொங்கு பாலத்தைப் படகுகள் செல்ல வசதியாக சற்று நேரம் உயர்த்திக்கொடுத்தான். அவ்வளவுதான், என்ன பயங்கரம்! சில நொடிப் பொழுதுகளுக்குள்ளாக அந்த விரைவு ரயில் விரைந்து வந்து நதியில் மூழ்கிற்று.

ரயிலிலுள்ள அநேகர் மாண்டு மடிந்தனர். அதனைக் கண்ணுற்ற அம்மனிதன் அழுதான், அங்கலாய்த்தான், தரையிலே உருண்டு புரண்டான், இறுதியில் துக்கம் தாங்காது மனநோயாளியானான். "நான் மட்டும் ரயில் கம்பெனியின் உத்தரவுக்கு கீழ்ப்படிந்து பாலத்தை உயர்த்தாமல் காத்திருந்தால் இத்தனை உயிர் நஷ்டம் ஏற்பட்டிராதே!" என்ற வார்த்தைகளே அவனுடைய கூக்குரலாயிருந்தது!

நித்திய அக்கினிச் சூளையாகிய நரகத்தின் சிறையிலிருந்து அநேக மாந்தர் "அந்தோ, நான் சுவிசேஷத்தின் அழைப்புகளுக்கு மாத்திரம் கீழ்ப்படிந்திருந்தால்" இந்தக் கதி எனக்கு நேரிட்டிராதே! என்று அலறி கதறும் எண்ணற்ற துயர ஓலங்களை நரகத்தில் நாம் கேட்கக்கூடும் என்றே நான் திட்டமாக நம்புகிறேன். நித்தியத்திற்கும் மாற்றிட முடியாத அங்கலாய்ப்பே "நமது இரட்சிப்பின் இழப்பு" என்பதை உணர்ந்து மனந்திரும்பி, இரட்சிக்கப்படுவோமாக!

- சுவிசேஷ மலர்

சந்தா அனுப்ப QR பயன்படுத்தவும்

maduraichristianfellowship@indianbk

பரலோக பொக்கிஷங்கள்

Published and Owned by:
Madurai Christian Fellowship, Regd Society,
*Editor* T.Rathnakumar, Madurai.
Printed by SFA Print (P) Ltd., Sivakasi.